Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 04 October–December 2024

# பெண்கள் மேம்பாடு குறித்த தொலைநோக்குப் பார்வை

**முனைவர் அ. ரஞ்சனி,**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி–620002,

**அறிவுத்தென்றல்**
சு.இ, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
சீதாலட்சுமி இராமசுவாமி கல்லூரி,
திருச்சிராப்பள்ளி–620002,

**ஆய்வுச் சுருக்கம்**

பெண்களின் மேம்பாடு சமூகத்தின் வளர்ச்சிக்கான அடிப்படை. சங்க இலக்கியத்தில் இருந்து, 19-ஆம் நூற்றாண்டு விடுதலைப் போராட்டங்கள் வரை பெண்களின் நிலைமாற்றம் தெளிவாக காணப்படுகிறது. கல்வி என்பது பெண்களின் சுதந்திரத்துக்கும் சமூக முன்னேற்றத்துக்கும் முக்கியமான கருவி. பாரதி, பாரதிதாசன் போன்றோர் பெண்களின் உரிமை மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தினர். நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு மிக முக்கியம்; பெண்களின் பொருளாதார பங்களிப்பு வறுமை நீக்கி சமுதாய வளர்ச்சியை தூண்டுகிறது. பெண்களின் மேம்பாடு என்பது தொடர்ந்து முயற்சிக்க வேண்டிய இலக்காகும். "பெண்மையின் வெற்றியே சமூகத்தின் வெற்றி" என்பது இவ்வாய்வின் சுருக்கமாகும்.

**திறவுச்சொற்கள்**

பெண்கள் மேம்பாடு, சமூவ வளர்ச்சி, கல்வி, சம உரிமை, பாலின சமநிலை, சங்க இலக்கியம், பாரதியார், பாரதிதாசன், பெண்கள் சாதனை, மகளிர் தினம் இவை கட்டுரையின் முக்கிய அம்சங்களை பிரதிபலிக்கும் திறவுச்சொற்களாகும்.

**முன்னுரை**

பெண்களின் மேம்பாடு என்பது சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான முக்கியமான அடித்தளம் ஆகும். சரித்திரத்தைப் பார்ப்போமெனில், பெண்கள் பல துறைகளில் முன்னேறத் தடைசெய்யப்பட்டாலும், தங்கள் திறமை, மனஉறுதி மற்றும் அர்ப்பணிப்பால் தனக்கென்று ஒரு இடத்தை உருவாக்கிக் கொண்டுள்ளனர் என்பதை

**“மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவஞ் செய்திட வேண்டுமம்மா!**
**பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ – இந்த**
**பாரில் அறங்கள் வளருமம்மா!” (கவிமணி)**

என்கிறார் கவிமணி. மனிதனாகப் பிறப்பதற்கு முற்பிறப்பில் செய்த நற்செயல்கள் (தர்மங்கள்) ஒரு காரணமாக இருக்க வேண்டும் என்பது தமிழ் சாஸ்திரங்களின் அடிப்படை மையக்கருத்தாகும். அதுபோல, ஒரு பெண்ணாகப் பிறப்பத்தன் காரணம் அருந்தவப்பயனே என்று கருதப்படுகிறது. மார்ச் 8 உலக மகளிர் தினம். 19 ஆம் நூற்றாண்டில் உலக மகளிர் அனைவரும் இணைந்து அவர்களின் உரிமைக்காகவும் மேம்பாட்டிற்காகவும் போராடிய தினம். அந்நாளில் தங்களின் வேலைவாய்ப்பு, சம உரிமை, மேம்பாடு, சம ஊதியம் ஆகியவற்றை முதன்மை நோக்கமாக கொண்டு போராடினர். ஆனால் இன்று சுதந்திர இந்தியாவில் பெண்கள் அனைவருக்கும் முழுசுதந்திரம் என்பது எட்டாக் கனியாகவே இருக்கின்றது. பேச்சுரிமை, எழுத்துரிமை என்று இந்திய அரசு வரையறுத்து வைத்திருக்கும் அடிப்படை உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கு கிடைத்து விட்டதா என்பது கேள்விக்குரியதாகவே உள்ளது. உலகில் பெண்கள் மேம்பாடும் விவாதத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. பெண்களின் மேம்பாடு குறித்த சிந்தனைகளை இவ்வாய்வில் காண்போம்.

**சங்க இலக்கியத்தில் மகளிர் மேம்பாடு**

**“செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலன” ( தொல் - பொருள்)**

என்று தொல்காப்பியம் பெண்களுக்கு உரியனவாய் உரைத்தது. இதை இந்த சமூகம் மறைத்ததன் காரணம் ஆரம்ப காலத்தில் நம் சமூகம் தாய் வழி சமூகமாகவே இருந்து பின் தந்தை வழி சமூகமாக மாறியது தான். சங்க இலக்கிய காலத்தில் 1446 புலவர்கள் இருந்திருக்கிறார்கள். அதில் ஆண்பாற்புலவர்களுக்கு இணையாக இலக்கிய ஆளுமை கொண்ட 32 பெண்பாற்புலவர்களும் வாழ்ந்திருந்தனர் என்பது பெண்களின் மேம்பாட்டை எடுத்துரைக்கிறது. குடும்பம் என்பது பெண்ணின் ஆளுகைக்கு உட்பட்டதாயிருந்தது. அந்தவகையில் நல்ல மக்களைப் பெற்று அவனைச் சமுதாய சிக்கலை எதிர்கொள்ளும் வகையில் உடல்வலிமை, மனவலிமை படைத்தவர்களாகவும் வளர்ப்பது தாயின் கடமையாகும். அதை,

**“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்வதற்குக் கடனே**
**--------------------------------------------------------------------**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே”**

**(புறம் – 312)**

என்கிறது புறநானூறு. இதன் மூலம் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய கடைமைகளைப் பங்கிட்டு கொடுக்கும் ஆளுமையுடையவளாகவும் கடமையைச் சரிவரச் செய்பவளாகவும் பெண் அமைந்திருந்ததை அறியமுடிகிறது.

**“முட்டு வேங்கொல் தாக்கு வேங்கோல்” (பாலை -28)**

என்று அதியமான் பரிசில் தாழ்த்தியபோது,

**“எத்திசை சொல்லினும் அத்திசை சோறே” (புறம் – 206)**

எனத் தன்மானத்தின் உச்சகட்டத்தை வெளிப்படுத்துகிறது மற்றும் ஆண்படைப்பாளர் பெண்களுக்கு ஒழுக்கத்தையும் நன்னடத்தையையும் அறிவுறுத்தி இருப்பதைப் போலவே ஔவையார் ‘**ஆடவர் நல்லவராயின் நிலனும் நன்மையைப் பயக்கும்**’ என்பதை,

**“எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லவை வாழிய நிலனே!” (புறம் – 187)**

என்கிறார். பெண்மையின் இலக்கிய அளுமைக்குச் சிறந்த சான்றாகும். இருப்பினும் பெண்கள் திறமை மிக்கவர்களாக இருந்தப் போதும் தங்களை முன்னிருத்தி அனுமதிக்கப்படவில்லை என்பதே மறுக்க முடியாத உண்மையாயிற்று.

**19 ம் நூற்றாண்டிற்கு பின் பெண்களின் மேம்பாடு**

சங்க காலத்தில் நம் சமூகம் தாய் வழி சமூகமாக இருந்து பின் தந்தை வழி சமூகமாக மாறி பெண்ணை வீட்டு வேலை செய்பவளாகவும் குழந்தை பெறும் ஒரு கருவியாக மட்டுமே எண்ணிப் பார்த்தது,

**“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு”?**

என்று கேள்வி எழுப்பிய போது,

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண்**
**இளைப்பில்லை காண் என்று கும்மியடி..”**

என பாரதி அவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து அத்துடன் பெண்களின் மேம்பாட்டிற்கும் வழிவகுத்தார். அன்றுத் தொட்டு இன்று வரை முன்னேறியுள்ளனர். ஆம்! உலக அளவில் இயற்பியல், வேதியியல் என இருபெரும் துறைகளில் நோபல் பரிசு பெற்ற மேரிகியூரி, இராணுவ செவிலியாக தன்னை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திய நைட்டிங்கேல், ஏழு கடல்களையும் நீந்திய புலா சௌத்ரி, எவரும் எட்டாத எவரெஸ்ட் சிகரத்தை எட்டிய பச்சேந்திரி பால், நவி கேப்டனாக கப்பற்படைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ராதிகா மேனன், ஏவுகனை மனுஷி என எல்லோராலும் அழைக்கப்பட்ட டெஸ்லி தாமஸ் இவர்களோடு இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சர் சுவேதா கிருபாளினி, முதல் பெண் ஆசிரியர் சாவித்ரிபாய் பூலே, வெள்ளையரை எதிர்த்து போரிட்ட வீரமங்கை வேலுநாச்சியார், முதன் முதலில் இந்தியாவிலிருந்து விண்வெளிக்கு சென்று தன்னுயிரையும் விட்ட கல்பனா சாவ்லா என பல பெண்கள் இன்று புதுமைப் பெண்களாக, வீரமங்கைகளாக, அறிவூட்டும் ஆசானாக, இல்லத்தலைவியாக, மருத்துவராக அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் சாதனை புரிந்து வருகின்றனர்.

**“மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமை யைக்கொளுத்துவோம்” (விடுதலை - 3)**

எனவே, ஒற்றை கருணையில் வயிறு நிரப்பும் பறவை போல சிலரின் உயரங்கள் மட்டும் ஒட்டுமொத்த பெண்களையும் சிகரம் ஏற்றி விடுவதில்லை.

மகளிர் மேம்பாட்டிற்கான காரணிகள்

**கல்வி**

**“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்” (குறள் - 393)**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க பெண்களின் மேபாடு என்பது அவர்கள் அரசியல், சமூகப் பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை நிலையில் பெறும் முன்னேற்றத்தையே குறிக்கும். இவற்றை பெறுவதற்கு பெண்களுக்கு இன்றியமையாத கருவியாக இருப்பது கல்வியே ஆகும்.

**“அதற்கு மூன்று விதமான உபாயங்கள் இருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி; இரண்டாவது உபாயம் கல்வி; மூன்றாவது உபாயம் கல்வியே! அதாவது கல்வியைத் தவிர வேறு எல்லா விதமான உபாயமும் சிறிதேனும் பயன்படாது என்பது கருத்து"**

***(சக்கரவர்த்தினி கட்டுரை-பக்.83)***

கல்வி ஒன்றே பெண்களை அறிவுபூர்வமாக சிந்திக்கச் செய்து அவர்களின் நிலைத்த மேம்பாட்டிற்கு ஆணிவேராக இருக்கின்றது. இதில் கல்வி ஒன்றே பெண்களுக்கு அடிமை நிலையிலிருந்து முன்னேற்றத்தை நல்கும் கருவி எனப் பாரதியார் நம்புவது புலப்படுகிறது.

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**
**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்**
**எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்**
**இளைப்பில்லை காண்” (பெண்கள் விடுதலைக்கும்மி - 6)**

எனப் படித்த விடுதலைப் பெண்கள் கூறுவதாகப் பாரதியார் குறிப்பிடுகின்றார்.

**நாட்டு வளர்ச்சியில் மகளிரின் பங்கு**

கல்வி கற்ற பெண்கள் பல நாடுகளுக்குப் பயணம் செய்து அறிவின் மேன்மையை அங்குப் புலப்படுத்திப் புகழ்பெற வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அங்குள்ள புதுமைகளைக் கொண்டுவந்து நம் நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் பாரதியார் விரும்புகின்றார். பெண்களே கூறுவது போல் அவர் கூறுவதைக் காண்போம்.

**“உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்**
**ஓது பற்பல நூல்வகை கற்கவும்**
**இலகு சீருடை நாற்றிசை நாடுகள்**
**யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே**

**திலக வாணுதலார் தங்கள் பாரத**
**தேசம் ஓங்க உழைத்திடல் வேண்டுமாம்"**
**(புதுமைப்பெண் - 8)**

நான்கு திசைகளிலுமுள்ள நாடுகளுக்குச் செல்வது வாழ்க்கை நுட்பத்தை அறியவும் பற்பல நூல்களைக் கற்கவும் பயன்படும் எனக் கூறுகின்றார். இந்த நோக்கத்தில்,

**"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"**
**(தமிழ்த் தாய் - 11)**

எனக் கூறிய பாரதியார், அப்பணிக்குப் படித்த பெண்கள் செல்ல வேண்டும் என்று ஆர்வமூட்டுகிறார். எதிர்கால இந்தியச் சமுதாயத்தின் வளத்திற்கும் நலத்திற்கும் பெண்களின் பங்கு இன்றியமையாதது என்பதை உணர்த்துகிறார்.

**"பெண்கட்கு கல்வி வேண்டும்**
**குடித்தனம் பேனுதற்கே!**
**பெண்கட்கு கல்வி வேண்டும்**
**மக்களைப் பேனுதற்கே!**
**பெண்கட்கு கல்வி வேண்டும்**
**உலகினைப் பேனுதற்கே….!" பாரதிதாசன்**

என்னும் அடிகளில் குடும்பத்தைப் பாதுகாப்பதற்கு மட்டும் அல்லாமல் உலகத்தைப் பாதுகாப்பதற்கும் பெண்கல்வி தேவை என்று பாரதிதாசன் பெண்கல்வியின் இன்றியமையாமையைக் கூறியுள்ளார்.

**பாலினப் பாகுபாடு**

சமூகத்தின் பல திசைகளிலும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பெருகி வருவதால் பாலினப்பாகுபாடு என்ற கருத்து அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளது. வரலாற்று ரீதியாக, பெண்களை விட ஆண்கள் சிறந்த பொருளாதார, சமூக மற்றும் அரசியல் படிநிலைகளில் பாலியல் பாகுபாட்டால் நிறுத்தப்பட்டுள்ளனர். மக்கள் தொகையில் பாதி பெண்களை கொண்டது. நம் பாரத நாடு. ஆகவே, எந்தெவொரு சமூகமும் அவர்களின் பாதி மக்கள் தொகையுடன் மட்டுமே வளர்ச்சியடைய முடியாது. சமுதாய வளர்ச்சியில் பெண்கள் என்பது மிக முக்கியமான கருத்தாகும். எனவே அனைத்து சமூகங்களும் ஆண்களுக்கு சமமாக தங்கள் பெண்களின் பங்களிப்பை உறுதி செய்ய வேண்டும். இது போன்ற செயல்கள் சமூகத்தில் பெண்களின் மேம்பாட்டிற்கு உதவுகின்றன.

**பெண்கள் மேம்பாட்டின் முக்கியத்துவம்**

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாததாகிறது. ஏனெனில் பெண்கள் நாடே வியக்கும் வகையில் மருத்துவம், சமூகம், ஆராய்ச்சி, அரசியல் என பல துறைகளில் பல சாதனைகள் புரிந்துள்ளனர். பெண்கள் மேம்பாட்டினால் நாடடில் வறுமை ஒழிகிறது. ஒரு குடும்பத்தில் ஆணின் வறுவாய் போதுமானதாக இல்லாத போது பெண்ணின் வறுவாய் அக்குடும்பத் தேவையைப் பூர்த்தி செய்து மேலும் வறுமையை ஒழிக்கிறது.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்**
**அறிவி லோங்கி இவ் வையம் தழைக்குமாம்;**
**பூணு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்**
**போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்;**
**நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்;**
**ஞான நல்லறம் வீர சுதந்திரம்**
**பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்;**
**பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ!" (புதுமைப் பெண் - பா. 4)**

என்கிறார் பாரதியார். ஆணும் பெண்ணும் நிகரெனக் கொண்டால் பெண்கள் மேம்பாட்டினால் ஒரு ஒட்டுமொத்த சமுதாயத்தில் வளர்ச்சி ஏற்படுகிறது. ஒரு பெண்ணின் வருவாய் அவள் குடும்பத்திற்கு மட்டுமல்லாமல் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகிறது. அதுமட்டுமல்லாமல் 'ஒரு ஆணுக்கான கல்வி என்பது அவனுக்கு மட்டுமே பயன்படும். ஆனால் ஒரு பெண்ணுக்கு வழங்கும் கல்வியானது, ஒரு தேசத்திற்கான கல்வி' என்ற ஒரு மிகவும் பிரபலமான மேற்கோள் உள்ளது. அது முற்றிலும் உண்மையே.

**"கும்மியடி! தமிழ்நாடு முழுவதும்**
**குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!**
**நம்மைப்பிடித்த பிசாசுகள் போயின**
**நன்மை கண்டோ மென்று கும்மியடி!"**

பாரதியாரின் கற்பனையில் பெண் விடுதலை வெளிப்படுகிறது. அடிமை இருள் நீங்கப் பெண்விடுதலை அவசியம் எனப்பாடுகிறார்.

**முடிவுரை**

பெண்கள் மேம்பாடு என்பது ஒரு நாள் நிறைவேறும் இலக்காக அல்லாமல், இடைவிடாத முயற்சியாக இருக்க வேண்டும். நகரத்தில் உள்ள பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று விட்டனர். ஆனால் கிராமத்தில் உள்ள பெண்கள் ஏன் நம்மில் சிலரும் இன்னும் அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில் தானே உள்ளோம்! எனவே, 'இனி ஒரு

விதி செய்வோம், அதை எந்நாளும் காப்போம் என போர்ப்பறை முழங்கி இச்சமுதாயத்தில் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் திமிர்ந்த ஞானச்செருக்கோடு மேம்பாடடைந்த பெண்களாக வருவோம் என உறுதியேற்போம்.

**'பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா?**
**பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா…?**

பெண்கள் மேம்பாடு மேம்பட்ட இந்தியாவின் அடையாளமாக மாறட்டும்.

**துணைநூற்பட்டியல்**


1. பாரதியார் கவிதைகள், முதல்பதிப்பகம் 2008, திருமகள் நிலையம், சென்னை – 600017.
2. திருக்குறள் மூலமும் உரையும், முதல்பதிப்பகம் 2006, சென்னை – 600029.
3. புறநானூறு, போ.வே. சோமசுந்தரனார், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 600008
4. பாரதிதாசன் கவிதை தொகுப்பு, சாரதா பதிப்பகம், சென்னை – 600029
5. தமிழ் சமூக வரலாறு, இரா. நெடுஞ்செழியன்
6. சமூக நீதியும் பெண்களும், முனைவர் கி சுவாமிநாதன்